இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 02.09.2026

# நேபாளப் பேரழிவு!

நேபாள நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் பலியானோர் எண்ணிக்கை 788 ஆக உயர்ந்துள்ளது. 320 வெளிநாட்டினர் உள்பட 2,502 பேரை காணவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் உலகையே உலுக்கிய சோகமாக இது அமைந்துள்ளது.

திபெத் எல்லையையொட்டிய நேபாளப் பகுதியில் கடந்த ஆகஸ்ட் 26-ஆம் தேதி ஏற்பட்ட பனிச்சரிவால் போடே கோஷி நதியில் பெருவெள்ளம் ஏற்பட்டது. இதில் நீர்மின் நிலையங்கள், பாலங்கள், சாலைகள், வாகனங்கள், வீடுகள் உள்ளிட்ட ஏராளமான கட்டிடங்கள் அடித்துச் செல்லப் பட்டன. 8 மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்தியா உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளும் காணாமல் போனார்கள்.

**சீன, நேபாள எல்லையில் இமயமலையின் லாங் டாங் லிங் சிகரம் அமைந்துள்ளது. சுமார் 8,000 மீட்டர் உயரத்தில் உள்ள இந்த சிகரத்தில் பனிப்பாறைகள் உடைந்தன. 2,000 அடி அகலம் கொண்ட பிரம்மாண்ட பனிமலை உடைந்து ஏரியில் விழுந்தது. இதன் காரணமாக ஏரி உடைந்து திபெத் பகுதியின் போய்கு நதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இது போன்ற பெருவெள்ளம், பனிமலை ஏரி வெடிப்பு வெள்ளம் என்றழைக்கப் படுகிறது.**

**திபெத்தின் போய்கு நதி நேபாளத்தில் போடே கோசி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. திபெத்தில் இருந்து சீறிப் பாய்ந்த வெள்ளம் நேபாளத்தின் போடே கோசி, திரிசூலி, நாராயணி நதிகளில் பெருக்கெடுத்து ஓடியது.**

இதனால் நேபாளத்தின் பல மாவட்டங்கள் முழுமையாக வெள்ளத்தில் மூழ்கின. இரு மாவட்டங்களில் உள்ள 13 நீர் மின் நிலையங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. சுமார் 6 மணி நேரத்துக்கும் மேலாக நேபாள நதிகளில் அபாய அளவைத் தாண்டி வெள்ளம் பாய்ந்ததால் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

வெள்ளத்தில் சிக்கிய 275 இந்தியர்கள் மற்றும் 128 இந்திய வம்சாவளியினரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், 108 பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. திபெத்தில் 49 இந்தியர்கள் உள்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் மாயமாகி உள்ளனர்.

**சிதாவன் மாவட்டத்தில் 264 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. பெரும்பாலான உடல்கள் அடையாளம் காண முடியாத நிலையில் இருப்பதால் மரபணு பரிசோதனை மேற்கொள்ளப் படுகிறது. சித்வானில் மருத்துவமனைகளில் போதிய இடவசதி மற்றும் குளிர்சாதன வசதிகள் இல்லாததால், உடல்களைப் பாதுகாப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. உடல்களில் இருந்து துர்நாற்றம் வீசத் தொடங்கியதுடன், அவை தொடர்ந்து அழுகி வந்ததால் தொற்று அபாயம் அதிகரித்து வருகிறது.**

**உடல்களை அடக்கம் செய்வதற்கு முன்பு DNA மாதிரிகள் சேகரிக்கப் படுகின்றன. மேலும், ஒவ்வொரு உடலுக்கும் தனித்துவமான அடையாள எண் மற்றும் சடலம் மீட்கப்பட்ட இடம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுகின்றன. உடல்கள் பின்னர் எளிதாகத் தோண்டி எடுக்கப்படும் வகையில் 1.5 மீட்டர் ஆழத்தில் அடக்கம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு உடலுக்கும் இடையே 40 செ.மீ. இடைவெளியும் விடப்படுகிறது.**

பேரிடர் நிகழ்ந்த போடே கோஷி ஆற்றில் மேலும் ஒரு ஏரி உருவாகி இருப்பதும், அது எந்த நேரத்திலும் உடைந்து மேலும் ஒரு வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கை விடப்பட்டு இருக்கிறது. போடே கோஷி ஆற்றில் திடீரென நீர்மட்டம் உயர்ந்தது. எனவே பதற்றம் தொடர்கிறது.

தேசியப் பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மை ஆணையம் (NDRRA) வெளியிட்ட தகவலின்படி, நீர்மின் திட்டங்களில் பணியாற்றிய 933 பேரைத் தொடர்புகொள்ள முடியவில்லை. அவர்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**இதுகுறித்து அமெரிக்க அரசின் புவியியல் ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், “இமயமலைப் பகுதியில் 4.4 ரிக்டர் அலகில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பனிமலைகள் உடைந்து நேபாளத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் தீவிர ஆய்வில் அங்கு நிலநடுக்கம் ஏற்படவில்லை. பனிமலை உடைந்தே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது” என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.**

**நேபாள தலைநகர் காத்மாண்டுவில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழக புவியியல் ஆராய்ச்சியாளர் விஷால் நாத் கூறும்போது, “இமயமலைச் சிகரத்தில் சுமார் அரை கி.மீ. தொலைவு அகலம் கொண்ட பனிமலை உடைந்து சுமார் 20 மில்லியன் கியூபிக் மீட்டர் தண்ணீர் சுனாமி அலையாக சீறிப் பாய்ந்திருக்கிறது.**

பல அடி உயரத்துக்கு போடே கோசி, திரிசூலி நதிகளில் அலைகள் எழுந்துள்ளன. இது இமய மலையில் உருவான சுனாமி ஆகும். பருவநிலை மாறுபாட்டால் இதுபோன்ற இயற்கை பேரிடர்கள் நேரிடுகின்றன” என்று தெரிவித்தார்.

நேபாள வெளியுறவு அமைச்சர் ஷிஷிர் கனால், “சீனா, நேபாளம், இந்தியா மற்றும் பூடான் ஆகிய நாடுகள் சூழலியல் ரீதியாக இணைக்கப்பட்டுள்ளன. இமயமலைச் சூழலியலைப் பாதுகாப்பதில்தான் நமது கூட்டு வாழ்வும் எதிர்காலமும் இருக்கிறது. காலநிலை மாற்றத்தால் மிக அதிகமாக பாதிக்கப்படும் பிராந்தியம் இமயமலைப் பகுதி என்பதால், நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்” என வலியுறுத்தினார்.

**நில நடுக்கம் காரணமா, பனிப்பாறை வெடிப்பு காரணமா என்ற முடிவுக்கு இன்னும் உலக நாடுகள் வரவில்லை. எதுவாக இருப்பினும் இந்தப் பேரழிவு உலகத்தையே உன்னிப்பாக கவனிக்கச் சொல்கிறது. குறிப்பாக இமயமலைப் பகுதி பாதுகாப்பு கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆறு மாநிலங்களை உள்ளடக்கியது இமயமலைப் பகுதி. இந்தியாவின் காலநிலையை தீர்மானிப்பதில் இமயமலை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆறுகள் உற்பத்தியாகும் பகுதியாகவும் இது அமைந்துள்ளது. எனவே இமயமலைப் பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நேபாள பேரழிவு எச்சரிக்கிறது.**



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (31-08-2026) சென்னை – திருவான்மியூரில் நடைபெற்ற, மயிலை கிழக்குப் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி – திருமதி கீதா இணையரின் மகள் மு. கிருத்திகா – ச. விஸ்வவாகீஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

### தி.மு.கழகத் தலைவர்களைப் பற்றி

# அவதூறு பரப்பியவர் மீது சி.பி.ஐ. விசாரணை!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் கழக சட்டத்துறை துணைச் செயலாளர் ஜி.சந்திரபோஸ் வழக்கு!

சென்னை, செப். 2 -

செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் மூலமாக திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் கழகத் தலைவர்கள் மீது அருவருக்கத் தக்க வகையிலும், அவதூறாகவும் செய்திகளை வெளியிட்ட இணைய பக்கங்களுக்கு எதிராக தி.மு.க. சட்டத் துறை சார்பாக அதன் துணை செயலாளர் டாக்டர் ஜி.சந்திர போஸ் பல புகார்களை சென்னை மாநகர காவல் ஆணையரிடம் தந்த போதிலும் கூட வழக்குகள் பதியப்படவில்லை. முதல் கட்ட புலன் விசாரணையும் செய்யப் படவில்லை.

அதே சமயம் கழகத்தொண்டர்கள், இளைய தலைமுறையினர், திராவிட கருத்தியலாளர்கள், அரசுக்கு எதிராக பேசுவோர் ஆகியோர் மீது, பொருந்தும் சட்டங்களில் வழக்குப் பதிவு செய்து, உடனுக்குடன் கைது நடவடிக்கைகளையும் காவல் துறை செய்து வருகிறது. சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், இந்த எதேச்சதிகாரப் போக்கில் கைது செய்யப்பட்டார்.

சமூக வலைதளங்களில் தி.மு.க. வையும் அதன் தலைவர்களையும் களங்கப்படுத்தும் வகையில் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை வெவ்வேறு இணையப் பக்கங்களுக்கு எதிராகவும், அவற்றை பெரும் அளவில் பகிர காரணமாக இருந்த வாய்ஸ் ஆப் காமன்ஸ் மற்றும் ரூட் போன்ற நிறுவனங்களுக்கு எதிராகவும் பல்வேறு காவல் நிலையங்களில் அளிக்கப்பட்ட 19 புகார்களின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை, வழக்கும் பதியவில்லை என்று தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளர் டாக்டர் ஜி.சந்திரபோஸ் மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அவர் தாக்கல் செய்த மனுவில் சமூக வலை தளங்களில் பதிவு செய்யப்பட்ட அவதூறு பதிவுகள் நீக்கப்படலாம் என்பதால் புகார்கள் மீது காவல்துறையினர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில் பெரிய பாதிப்பு ஏற்படுத்தும் என்றும், இதுவே த.வெ.க. வினர் மீது எதிராக கருத்து தெரிவிப்பவர்கள் மீது உடனே நடவடிக்கை எடுத்து வழக்குப் பதிவு செய்யும் காவல்துறையினர் தி.மு.க. மீது அவதூறு தெரிவிப்பவர்கள் மீது எந்த ஒரு வழக்குப் பதிவு செய்யாததால் இந்த புகார்களை சி.பி.ஐ.க்கு அனுப்பி நியாயமான விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த வழக்கு 28.08.2026 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ ஆஜராகி வாதங்களை எடுத்து வைத்தார்.

இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி லட்சுமி நாராயணன் இந்த மனுவிற்கு இரண்டு வாரங்களில் பதில் அளிக்க வேண்டும் என்று தமிழக டி.ஜி.பி. சென்னை மாநகர காவல் ஆணையர் உள்ளிட்ட காவல்துறையினருக்கும் “எக்ஸ்” மற்றும் “மெட்டா” நிறுவனங்களுக்கு நோட்டீஸ் உத்தரவிட்டு வழக்குகளின் விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்துள்ளார்.

### அமைச்சர்களின் உத்தரவினால்

# பேரூராட்சி டெண்டர்களில் விதிமீறல்!


## அவசர அவசரமாக வெளியிடப்படுவது ஏன்?

*சென்னை, செப். 2 -*

*பேரூராட்சி இயக்குநரகம் வெளியிட்டுள்ள பல டெண்டர்களில், விதிகளை மீறி, டெண்டர்களை சமர்ப்பிக்க சில நாட்களே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இது மீண்டும் சர்ச்சையை கிளப்பியுள்ளது. தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் இணையதளம் மூலம் டெண்டர் வெளியிடப்பட்டு மேற்கொள்ளப் படுகிறது. இதன்படி ஒளிவு மறைவற்ற டெண்டர் விதிகளின்படி இந்த டெண்டர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*இதன்படி, 2 கோடிக்கு குறைவாக மதிப்புள்ள பணிகளுக்கு டெண்டரை சமர்ப்பிக்க 15 நாட்கள் கால அவகாசமும் 2 கோடிக்கு மேல் உள்ள பணிகளுக்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்க வேண்டும். ஆனாலும் சில அவசர காலங்களில் பணிகள் மேற்கொள்ள குறுகிய கால டெண்டர்கள் வெளியிடப்படும்.*

*இதன்படி பணியின் அவசர தன்மையை பொறுத்து துறையின் உயர் அதிகாரியிடம் இருந்து அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்படும். அப்படி இருந்தாலும் குறைந்தது 7 நாட்கள் கால அவகாசம் வழங்கப்படும்.*




*இந்நிலையில் பேரூராட்சி இயக்குனரகம் சார்பில் பல்வேறு மண்டலங்களில் வெளியிடப்பட்டுள்ள டெண்டர்களில் 7 நாட்களுக்கு குறைவாகவே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, வடுகப்பட்டி பேரூராட்சியில் 24 லட்சத்தில் சமூக நலக் கூடம் கட்டும் டெண்டரை சமர்ப்பிக்க 5 நாட்கள் மட்டுமே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.*

*நாரவாரிக்குப்பம் பேரூராட்சியில் குடிநீர் பணிகள் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் டெண்டரை சமர்ப்பிக்க 8 நாட்கள் மட்டுமே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அபிராமம் பேரூராட்சி வாராந்திர சந்தை தொடர்பான டெண்டரை சமர்ப்பிக்க 4 நாட்கள் மட்டுமே கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*அண்மையில் நகராட்சி நிர்வாகத்துறையின் கீழ் வெளியிடப்பட்ட 50க்கும் மேற்பட்ட குறுகிய கால டெண்டர்களை அண்மையில் த.வெ.க. அரசு அதிரடியாக ரத்து செய்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.*

*இந்த துறையில் உரிய விதிமுறைகளையும், வழிகாட்டுதல்களையும் முறையாக பின்பற்றாமல் அவசர அவசரமாக டெண்டர்கள் வெளியிடப்பட்டதே இந்த அதிரடி நடவடிக்கைக்கு முக்கிய காரணம் என்று கூறப்பட்டது. ரத்து செய்யப்பட்ட டெண்டர்களில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்கள் அடங்கியிருந்தன.*

*ஏற்கனவே தமிழகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள பல பெரிய திட்டங்களின் டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டு மறுபரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டு வரும் நிலையில், தற்போது பேரூராட்சி இயக்குநரகம் வெளியிட்டுள்ள பல டெண்டர்களில் விதி மீறி, டெண்டர்களை சமர்ப்பிக்க சில நாட்களே கால அவகாசம் வழங்கியுள்ளது பெரும் விவாதத்தை கிளப்பியுள்ளது.*

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

**ஒரு கோமாளி அரண்மனைக்குச் சென்றால் அவன் அரசனாகி விடுவதில்லை. அரண்மனைதான் சர்க்கஸ் கூடாரமாகி விடும்**

**– துருக்கிய பழமொழி**